Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 18/2024**

Preliminary Register

Deposition of **PW- 1 LW -1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | துரைசாமி | Father Name | : | காளியப்பன் |
| Village | : | பூதங்குடி | Taluk | : | நாகப்பட்டிணம் |
| Caste | : | | Calling | : | கூலி வேலை |
| Religion | : | | Age | : | 58 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 13th day of October 2025.

எதிரி ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு இரண்டு பெண் குழந்தைகள் மற்றும் 2 ஆண் குழந்தைகள் உள்ளனர். விபத்தில் இறந்து போன சத்தியராஜ் எனது இளைய மகன் ஆவார். எனது மகன் எங்கள் தெருவை சேர்ந்த மணிகண்டன் என்பவருடன் சேர்ந்து கொத்தனார் வேலைக்கு செல்வார். இன்றிலிருந்து சுமார் 1 வருடத்திற்கு முன்பு எனது மகன் மற்றும் மணிகண்டன், கோபிநாத் ஆகிய மூவரும் தஞ்சாவூருக்கு கொத்தனார் வேலைக்கு சென்றார். மூவரும் மணிகண்டனுக்கு சொந்தமாக இரு சக்கர வாகனத்தில் சென்றார்கள். அன்றைய தினம் இரவு எங்கள் ஊர் பிரசிடண்ட் எனக்கு போன் செய்து நார்த்தாங்குடி அருகே மூவரும் சென்ற இருசக்கர வாகனம்

விபத்துக்குள்ளானதாக சொன்னார். நான் உடனே திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அங்கு சென்று பார்த்தபோது எனது மகன் சத்தியராஜூம் கோபிநாத்தும் இறந்து விட்டார்கள். மணிகண்டன் காயமடைந்துவிட்டார். விபத்துக் குறித்து நான் வலங்கைமான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் அந்த புகார் நான் கொடுத்ததுதான். (புகார் **அ.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது) போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.10.13 17:08:48 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 18/2024**

Preliminary Register

Deposition of **PW- 2 LW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சதீஷ் | Father Name | : | பக்கிரிசாமி |
| Village | : | பூதங்குடி(நாகூர்) | Taluk | : | நாகப்பட்டிணம் |
| Caste | : | | Calling | : | கூலி வேலை |
| Religion | : | | Age | : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 13th day of October 2025.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>**முதல் விசாரணை-**</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மாமா ஆவார். விபத்தில் இறந்துபோன சத்தியராஜ் எனது மைத்துனர் ஆவார். இன்றிலிருந்து சுமார் 1 வருடத்திற்கு முன்பு சத்தியராஜ், மணிகண்டன் மற்றும் கோபி என்பவருடன் கொத்தனார் வேலைக்காக பல்சர் இருசக்கர வாகனத்தில் தஞ்சாவூர் சென்றார். அவ்வாறு சென்றபோது நார்த்தாங்குடி நால்ரோடு அருகில் அவர்கள் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது லாரி மோதியதாகவும அதில் சத்தியராஜும் கோபியும் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டதாகவும் மணிகண்டனுக்கு கை மற்றும் கால்களில் பலத்த காயம் ஏற்பட்டதாகவும் எனது மாமா எனக்கு தகவல் கொடுத்தார்.

நான் உடனே திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சென்றேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.10.13 17:08:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 18/2024**

Preliminary Register

Deposition of **PW- 3 LW - 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கோகுல் | Father Name | : | சங்கர் |
| Village | : | பூதங்குடி (நாகூர்) | Taluk | : | நாகப்பட்டிணம் |
| Caste | : | | Calling | : | கூலி வேலை |
| Religion | : | | Age | : | 24 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 13th day of October 2025.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>**முதல் விசாரணை-**</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மாமா ஆவார். விபத்தில் இறந்துபோன சத்தியராஜ் எனது மைத்துனர் ஆவார். விபத்தில் இறந்துபோன கோபி எனது அண்ணன் ஆவார். இன்றிலிருந்து சுமார் 1 வருடத்திற்கு முன்பு கோபிநாத், மணிகண்டன் மற்றும் சத்தியராஜ் என்பவருடன் கொத்தனார் வேலைக்காக பல்சர் இருசக்கர வாகனத்தில் தஞ்சாவூர் சென்றார்கள். அவ்வாறு சென்றபோது நார்த்தாங்குடி நால்ரோடு அருகில் அவர்கள் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது லாரி மோதியதாகவும அதில் சத்தியராஜூம் கோபியும் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டதாகவும் மணிகண்டனுக்கு கை மற்றும் கால்களில் பலத்த காயம் ஏற்பட்டதாகவும் எனது மாமா எனக்கு தகவல் கொடுத்தார். நான்

உடனே திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சென்றேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.10.13 17:09:29 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.